உ

விநாயகர் துணை



ஈழம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்டிருந்து, பிரான்ஸில் அமரத்துவமடைந்த

# திருமதி வல்லிபுரம் பரமேஸ்வரி அவர்களின்

# "நினைவு மலர்"

27.10.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் திருமதி வல்லிபுரம் பரமேஸ்வரி
# அவர்கள்



மண்ணில்
18.10.1945

விண்ணில்
27.09.2003

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டுநல் சுபானு அமைந்த ஆவணிதன்
பூண்ட பூர்வபக்கத் துவிதியையில் - மாண்பு
வல்லிபுரம் பத்தினியார் பரமேஸ்வரி அம்மையார்
தொல்லுலகு நீத்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் வணக்கம்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக்கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

## தேவாரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வல முறை இறையே

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தா உனக்காளா இனி அல்லேல் எனலாமே

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

## திருவாசகம்

பால் நினைந்துட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிககெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியை
அம்பலங் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட
பாற் கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்னும் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே

## திருப்புகழ்


இறவாமல் பிறவாமல் எனையாள் சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெரு வாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச வி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி வல்லிபுரம் பரமேஸ்வரி அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாடாம் இலங்கையின் மகுடமெனத் திகழும் யாழ்ப்பாணத்தில் கல்வி, செல்வம், பொருட் செல்வம் நிரம்பப் பெற்ற வடமராட்சிப் பகுதியில் கரவெட்டி கிழக்கு என்ற ஓர் கிராமம் உள்ளது. இந்த ஊரில் பல பெயர்பெற்ற சைவத்தலங்கள் பல பாடசாலைகளையும் உள்ளடக்கி யுள்ளது. இங்கே தச்சன் தோப்புப் பிள்ளையார், வடலிதோட்ட பிள்ளையார், உப்புத்தண்ணி பிள்ளையார், நுணுவில் பிள்ளையார், பல நன்னீர் வளங்களுடைய அத்துளு அம்மாள் ஆலயம் முதலிய திருத்தலங்களையும் பாடசாலைகளையும் உள்ளடக்கியுள்ளது. இந்தப் பகுதியில் அமரர்கள் வேலுப்பிள்ளை இலட்சுமிபிள்ளை தம்பதிகளுக்குப் புத்திரியாய் (காலம் சென்ற செல்லம்மா, பரமேஸ்வரி, வல்லிபுரம்) இவர்கள் சகோதரர்கள் இரண்டாவது மகள் பரமேஸ்வரி பிறந்து செல்வச் செழிப்போடும் வாழ்ந்து வந்தார். இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில் அவ்வூரில் வசித்து வந்த அமரர் வேலுப்பிள்ளை பார்வதி என்பவர்களுக்கு கனிஷ்ட புத்திரனாகப் பிறந்த வல்லிபுரம் என்பவரைத் தமது 15வது வயதில் மணந்து இல்லறம் நல்லறமாகத் தங்கள் வாழ்க்கைத்துணையாக அமைத்துக் கொண்டார். இப்படியாக வாழ்ந்து வரும் காலத்தில் திருமண வாழ்க்கையின் பயனாக பூர்வ புண்ணிய விசேடத்தால் நான்கு பிள்ளைகளில் மூன்று ஆண்பிள்ளைகளையும் ஒன்று பெண் பிள்ளையும் பெற்று இன்புற்று இருந்தனர். இவர்கள் இருவரும் சமயப்பற்றும், மேம்பாட்டினாலும் தமது குலதெய்வமாகிய வடலிதோட்ட பிள்ளையாரையும் காளியையும் அல்லும் பகலும் துதித்து திருவலமிட்டும் பூசை புண்ணியங்களிலும் பங்குபற்றிக் கொண்டும் புலோலி பகுதியில் எழுந்தருளியிருக்கும் வல்லிபுரக் கோவிலையும் மறவாமல் பூசை, நேர்த்தி கடன்களையும் செய்து வந்தார்கள். இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையினாலென்னவோ இவர்களுடைய வாழ்க்கை செல்வச்சிறப்போடும் இருந்தது என்பது உண்மை. இவ்வாறு வாழ்ந்து வருகையில் அவர்களின் இரண்டாவது மகன் இரங்கநாதன் அவரின் விதியின் பலனாக விண்பதமடைந்து விட்டார். அதனால் வாழ்வில் அவர்களுக்குத் துக்கம் மேலிட்டது. அவர்களினது மகளாகிய தாமரைச்செல்வி அவவின் தம்பியாகிய வல்லிபுரம், பூமணி தம்பதிகளின் புத்திரனை வாழ்க்கைத் துணையாக ஏற்று இன்புற்று இருக்கையின் பேரன் விஜிகரன் பிறந்து அவருடன் இன்பம் பொங்கும் நிலையில் இருந்தார்கள். அதே வேளை தான் அவரின் கணவரை வல்லிபுரத்தை இறைவன் தன்னிடத்தில் அழைத்துக் கொண்டான். பின்பு இப்படியான நிலையில் மூன்று பிள்ளைகளும் திரைகடல் ஓடியும் திரவியம் தேடலாம் என்னும் எண்ணத்தில் மகன்மாரும், மருமகனும் வெளிநாடு சென்று விட்டனர். அதே நேரம் கனகரட்ணம் சியாமளா திருமணம் புரிந்து பிள்ளைகள் பிறந்து இன்புற்று இருந்தனர். கணவனை இழந்த நிலையில் தனித்து நிற்க முடியாமல் பிள்ளைகளுடன் பரிஸ் நாட்டில் வந்து சந்தோசமாக வாழ்ந்து வந்தார். அதே வேளை இளைய மகன் விஜயரட்ணம், சோதிமலரைத் திருமணம் முடித்து சந்தோசமாக வாழ்ந்த் வந்தார். பெறாமக்கள் புவனேந்திரன், விஜி மருமகன் பாஸ்கரன் இந்த பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்ந்து வந்தார். பேரன், பேத்தி மக்கள், மருமக்கள், பெறாமக்கள் எல்லோருடனும் இன்புற்று இருக்கையின் நோய் வந்து தீவிர சிகிச்சையின் பின்னர் நன்கு தேறி உணவும் உட்கொண்ட காலை, திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு பேரன் பேத்தி மக்களை மருமக்களை பெறாமக்களை பெரிதும் தவிக்கவும் உடன் பிறந்தவர் உறுதுயர் கொள்ளவும் மண்ணக வாழ்வை மறுத்தே விண்ணகம்சென்றார். 27. 09. 03 அன்று இறைவன் தன்னுடன் அணைத்துக் கொண்டார்.

***ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன்மார் புலம்பல்

அன்பினது வழிதனிலே ஆதரவு உற்றும்
பண்பினது பக்குவத்தில் பதில்கள் தந்தும்
துன்பமது தொடர் துயரம் வந்த போதும்
துடைத்திட்டீர் எமதுயரம் நின்துயர் போல்
மன்னவரின் மதிமேலே நின் விதிதான் தங்க
அன்னவரும் ஆதரித்தார் நின்ஆத்மா தனை
இன்பநிலை ஏற்றங்கே எழுந்தருளி விட்டீர்
துன்பநிலை தொடர்ந்திங்கே துயருற்று நிற்கின்றோம்

பெற்றநாள் முதலாய் எம்மைப் பேணியே வளர்த்துக் காத்து
உற்றவோர் கல்விகற்க உரியவை அனைத்தும் தந்து
மற்றவர் மெச்சவாழ்வு மலர்ந்திட உதவி செய்த
சற்றெமை விட்டு நீங்கள் சடுதியாய் மறைந்ததேனோ

## மகள் புலம்பல்

கருவறை நாள் முதல் கண்ணுக்குக் கண்ணாக
காத்து நின்ற அம்மா! உங்களையினி என்று நான்
காண்பேன் என்று கதறுகிற என் மனம்
காற்றோடு கலந்த உங்கள் காதில் விழுகிறதா?

## சகோதரர் புலம்பல்

அன்றே எம்மை அன்பால் கூட்டி அரவணைத்தே
குன்றேயனைய குணத்தால் எம்மைக் குலவியதும்
நன்றே செய்தீர் நலமே பெறவே நல்லுதவி
குன்றாதளித்துக் கூட்டியதெல்லாம் குறைவின்றி
நன்றே நினைத்து நீர்பொழி கண்ணாய் நிற்கின்றோம்
என்றோ காண்போம் எங்களினிய சோதரியே

## மைத்துனர்மார் மைத்துனிமார் புலம்பல்

மைத்துனி என்ற வார்த்தை மதிப்பும்மால் பெற்றதம்மா
இத்தனைநாளும் எம் மோடிணைந்திருந்து அன்பு கொண்டு
நித்தமும் இருப்பீர் என்றேநினைத்து நாம் வாழ்ந்தோம்
வித்தகன் பாதம் செல்வீர் என்பதால் விட்டுநிற்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

காலத்தின் கட்டமைப்பில் நின்னை காலன் கண்டான்
கண்டுடனே கதைத்ததாற் களிப்புற்றிருந்தோம்
கோலத்தாற் செய்பணியாற் தாயே போலக்
குணமிகுந்த மாமியுங்கள் குணங்கள் கண்டு
ஞாலத்தில் ஆறினோமே இந்த வாழ்வு
நடுவிலெம்மை விட்டோடிப் போனதாலே
காலத்தும் அழியாத சோகம் பெற்றோம்
கடவுளடிப் பேறமைக சாந்தி சாந்தி

## பேரப் பிள்ளைகள் புலம்பல்

தொட்டணைத்து முத்தமிட்டுத் தாலாட்டிப் பாடி
கிட்ட இருந்தே வளர்த்த பாட்டிநீர்
எட்டி நடந்து எங்கோடிப் போனீர்கள்
நாம் எங்கே இனிக் காண்போம்
பட்டமரம் தளிர்த்திடுமோ இப்பாரினிலே
பரிதவிக்கினறோமே நின் பிரிவுத்துயரதனால்.

## பெறாமக்கள் புலம்பல்

பெற்றிட்ட மக்கள் பெறாமக்கள் என்ற பேதமின்றி
முற்றிப் பழுத்த இனிய மனத்துப் பெரும் பிறவி
அற்றிட்டதே உயிர் என்றதும் நெஞ்சம் அதிர்ந்ததுவே
பெற்றிட்ட தாயையிழந்து பெருந்துயரம் உற்றோமே
சின்னம்மா என்றும் ஆசையம்மா என்றும் அழைக்க யாருளரோ
சிந்தையெல்லாம் மகிழ்வை நிறைந்த நாட்களையும்
அன்பினிலே தாயாய் அரவணைத்த நாட்களையும்- இனி
யாரிடம் காண்போம் ஆண்டவா இரட்சிப்பாய் !

## உற்றார், உறவினர், நண்பர்கள் இரங்கல்


அன்பாலும் பண்பாலும் உற்றாரை உபசரித்து
நண்பரை நாடிவந்து நல்லுதவி தான் செய்து
துன்பத்தில் தேடி வந்து தோள் கொடுக்கும் குணத்தையினி
எண்திசை தேடியும், காண்போமா தெரியலையே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

அன்புக்கும், பண்புக்கும் இலக்கணமாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து கண்ணை இமை காப்பது போல் எமைக்காத்த எம் அன்புக்கினிய தாயார் நோய்வாய்ப்பட்டிருந்த சமயத்தில் வைத்தியசாலையில் சென்று சுகம் விசாரித்தவர் களுக்கும், அவரின் திடீர் மறைவுச் செய்து கேட்டவுடன் நேரில் வந்து ஆறுதல், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உள்ளூர், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பின் இறுதிக்கிரியைகளின் போது கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையம் சாந்தி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவியும், ஒத்தாசை யுமாக இருந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இம்மலரை சிறப்பாக அச்சிட்டு உதவியவருக்கும், இன்றைய எமது அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொண்டு மதிய போசனத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் அனைவ ருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
**பிள்ளைகள்**
(பிரான்ஸ், ஜேர்மனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும்.
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



Printed by JR PRINT London Tel: 020 8503 6643 www.jrprint.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org